[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜூலை 3

அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் தலா 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் மூலமாக, 32 மாவட்டங்களில் நடைபெறும் பல்வேறு திறன் பயிற்சித் திட்டங்களை, தற்போது 5 மண்டல இணை இயக்குநர்கள் கண்காணித்து வருகின்றனர். அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் திறன் பயிற்சி வழங்கும் நிறுவனங்களை திறம்பட நிருவகிக்கவும், கண்காணிக்கவும், விழுப்புரம் மற்றும் சேலம் மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகங்கள் நடப்பாண்டில் 2 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. அயனாவரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைக்கு 7 கோடி ரூபாய் செலவில் "சி.டி. ஸ்கேன் கருவி" வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் 3 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் அவசர சிகிச்சைப் பிரிவு (ICU) உருவாக்கப்படும். 75 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களிலுள்ள ஆய்வகங்களில் 2 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் "செமி ஆட்டோ அனலைசர், பைனாகுலர் மைக்ரோஸ்கோப், இ.சி.ஜி. இயந்திரம்" போன்ற புதிய உபகரணங்கள் வழங்கப்படும். தொழிலாளர்களுக்கு சிகிச்சைக்காக வழங்கப்படும் உயர் மருந்துகளை பாதுகாப்பாக வைக்கும்பொருட்டு, 7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் 4 மண்டல நிருவாக மருத்துவ அலுவலகங்களில் குளிர்சாதன அறை மற்றும் ஜெனரேட்டர் கருவிகள் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்து, அமருகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. வணிக வரி மற்றும் பதிவுத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி, என்னவென்று சொல்லுங்கள்.

2018 ஜூலை 3]

முற்பகல் 11-25

திரு. எம். தமிமுன் அன்சாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் பேரவை விதி எண் 110—ன்கீழ் பல்வேறு சமூக நலன்களுக்கான அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள். அத்தனை அறிவிப்புகளுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்து. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவ்வளவுதான் உட்காருங்கள்.*

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** *மிக முக்கியமாக ஹஜ் பயணம் செய்யக்கூடிய யாத்திரிகர்களுக்காக 6 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கின்ற செய்தி மிகப் பெரிய மகிழ்ச்சிக்குரிய செய்தி. (மேசையைத் தட்டும் ஒலி) இதில் சிறப்பு என்னவென்று சொன்னால், இந்தியாவில் காஷ்மீர் போன்ற மாநிலத்தில்கூட இதுபோன்ற திட்டங்கள் அறிவிக்கப்படவில்லை. மத்திய அரசு கைவிட்ட நிலையில் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசு, இது திராவிட இயக்க பூமி; சவலைப் பிள்ளைகளான சிறுபான்மை மக்களுக்கு நாங்கள் என்றும் அரணாக இருப்போம். அம்மாவுடைய அரசு சிறுபான்மை மக்களுக்கு என்றும் துணையாக இருக்கும் என்பதை நிரூபிக்கும்விதமாக (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 6 கோடி ரூபாயை நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். ஒரு செய்தியைச் சொல்லி நான் அமருகின்றேன். முஸ்லிம்களுடைய 5 மிகப் பெரிய கடமைகளில் ஒன்று, புனிதப் பயணமான ஹஜ் யாத்திரை. இதற்கு மானியம் அளித்ததற்கு நன்றி கூறி அமர்கிறேன்.*

நம்முடைய நாடு ஆங்கிலேயருக்கு எதிராக விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த காலத்தில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. தமிமுன் அன்சாரி, இருங்கள். தர்மசங்கடத்தை உருவாக்காதீர்கள். உட்காருங்கள். நன்றி சொல்கிறீர்கள். அதோடு நிறுத்திவிடுங்கள். நீங்கள் மானியத்தில் பேசுவதுபோல பேசுகிறீர்கள். நான் எல்லோருக்கும் வாய்ப்புத் தர வேண்டும். (குறுக்கீடு) என்ன, சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்*

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [2018 ஜூலை 3

பேரவை விதி எண் 110-ன்கீழ் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள். முக்கியமாக நாங்கள் எல்லாம் தொடர்ந்து வலியுறுத்தி வந்த ஹஜ் மானியத்தை 6 கோடி ரூபாயாக உயர்த்தி 3,728 பேர் பயன்பெறக்கூடிய வகையில், ஏழைகளெல்லாம் 16,000 ரூபாய் வரை மானியமாக பெற்றுக்கொள்ளக்கூடிய ஓர் அற்புதமான திட்டத்தை அறிவித்தமைக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் சார்பாக வாழ்த்தி பாராட்டுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய மொத்தம் 575 சார்-பதிவாளர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசில் கொள்கை முடிவு எடுக்கப்பட்டு, தற்போது 486 அலுவலகங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. 19 கட்டடங்களில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மீதம் இருக்கக்கூடிய 70 அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட வேண்டிய முடிவில் இன்று 10 புதிய கட்டடங்களை அறிவித்து, 10 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்த மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) துறையின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரம்ஜான் மாத பிறை நிலவாய், ரசூல்-இ-கரீம் வழிநடந்த முழு மதியாய், சிறுபான்மையினர் நலம் காக்க போராடி, எண்ணிலா பணிகள் ஆற்றி, இஸ்லாமிய மக்களின் நலம் பேணி, அவர்தம் இதயங்களில் என்றும் நிறைந்திருக்கும் இணையில்லாத் தலைவி எங்கள் அம்மா!*

இன்றைய நாள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தமிழ்நாட்டில் 2018 ஆம் ஆண்டு ஹஜ் புனித பயணம் மேற்கொள்ளவுள்ள 3,728 ஹஜ் பயணிகளுக்கு ரூபாய் 6 கோடி வழங்கியதற்கும், தொழிலாளர் நலத் துறைக்கு பல கட்டடங்கள் ரூ.30.34 கோடி செலவிலும், தொழிலாளர் E.S.I. Hospital-*க்கு* I.C.U., Semi Auto-Analyser *போன்ற பல கருவிகள்*

2018 ஜூலை 3] [*டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்*]

வழங்கியமைக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹஜ் பயணிகளுக்கு மத்திய அரசு வழங்கி வந்த மானியத்தை நிறுத்தியபோதும், குன்றிலிட்ட குணக் கொழுந்தாய், குறைவில்லாத கலைபொருளாய், கூறும் மறைபொருளாய், இதயக் கோயிலாய், இருள் அகற்றும் ஒளிவிளக்காய், இன்பமளிக்கும் திருவிளக்காய், எங்கும் ஒளிதரும் புகழ் விளக்காய் வாழும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை வழி நடத்துகின்ற எங்களுடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாகுபாடின்றி,*

எல்லா மக்களும் என் உறவு
எல்லோர் மொழியும் என் பேச்சு
திசைதொழும் துலுக்கர் என் தோழர்
தேவன் இயேசுவும் என் கடவுள்
சத்தியம் எங்கள் வேதம்
சமத்துவம் எங்கள் கீதம்

என்பதை நாளும் மனதில் வைத்து, 4 முத்தான அறிவிப்புகளை பேரவை விதி எண் 110-ன்கீழ் அறிவித்தமைக்கு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பாக எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. தகவல் கோரல்

(அ) மத்திய மனித வள மேம்பாட்டுத் துறையின் இணையவழி நூலகத்தில் தமிழ் மொழி உள்ளிட்ட தென்னக மொழிகள் புறக்கணிக்கப்பட்டிருப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

முற்பகல் 11-30

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய பா.ஜ.க. அரசினுடைய மனித வள மேம்பாட்டுத்*